# அட்டாளைச்சேனை பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 25 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மே 26 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜனவரி 29 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேர்ந்து நின்ற அடிப்படையில் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) நிலையான சொத்தக்களுக்கான மாற்றீட்டுக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வில்லை.

## 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) சபையின் காணி, கட்டிடங்களது பெறுமதி கணிப்பிடப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) திருப்பிச் செலுத்தப்படும் வைப்புகளான ரூபா 589,312 மீதான தகவல்கள் எதுவும் இருக்கவில்லை.

(ஈ) மின்சார உபகரணங்களது கையிருப்புப் பெறுமதியான ரூபா 151,891 நேரடி சரி, பிழை பார்த்தலின்றி புத்தகப் பெறுமதியின் அடிப்படையிலேயே அமைந்நதிருந்தது.

(உ) நிலையான சொத்துக்கள் மீதான வட்டி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட வில்லை.

(ஊ) அரசாங்க மூலதன மானியம் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 14,153,216 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2000 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதிக்குரிய சபையின் ஏனைய வைப்புகளான ரூபா 309,236 தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

## 1.3.3 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ)பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிகள் 1988 | |
| விதி 180 | காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்யவில்லை |
| விதி 217 | பீஎஸ் 46க்கமைய சபையினால் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை |
| விதி 218 | காணியும் கட்டிடங்களும் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் சரி, பிழை பார்க்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 142,489 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,349,154 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 10 | 20 | - |
| (ii) | குத்தகை வாடகை | 2,394 | 1,167 | 156 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 585 | 295 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 288,300 | 835 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 டிசெம்பர் 31 வரை அக்கரைப்பற்று மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தால் அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 835,150 நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,036,805 முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3 செலவின அமைப்பு

சபையின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினமும் வேறுபாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 8,709 | 8,621 | 88 |
| ஏனையவை | 4,477 | 2,798 | 1,679 |
| உபமொத்தம் | 13,186 | 11,419 | 1,767 |
| மூலதனச் செலவினம் | 28,013 | 1,276 | 26,236 |
| நிகர மொத்தம் | 41,199 | 12,695 | 28,003 |

## 2.4 அறவிட வேண்டிய ஊழியர் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 3,268 ,509 ஆகும். இதில் 1 ஆண்டிற்கு மேற்பட்டவற்றின் கூட்டுத்தொகை ரூபா 10,120 ஆகும்.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்வருமாறு.

| பதவியின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்றுநர் | 01 | - |
| உதவு தரத்தினர் | 09 | 12 |
| ஆரம்ப தரத்தினர் | 14 | 08 |
| ஏனையோர் | - | 08 |
| | 24 | 34 |

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்